RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22479

# பிறமேக நிதானம் சுவடி கூறும் வேற்றுமை உருபுகள்

பி.ஜே. ஜெமி ஜோண் [அ], ஹா. சுபி [அ, *]

[அ] தமிழ்த்துறை அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, தொலையாவட்டம்-629157. (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம், அபிசேகபட்டி, திருநெல்வேலி - 627012) தமிழ்நாடு, இந்தியா.

# Premaha nithana suvadi koorum vettumai urubuhal

P.J. Jemi John [a], H. Subi [a, *]

[a] Department of Tamil, Annai Velankanni College, Tholayavattam-629157, (Monmaniam Sundaranor University, Abishakapatti, Thirunelveli – 627012) Tamilnadu, India

* Corresponding Author: subiavc@gmail.com

Received: 22-07-2022
Revised: 13-09-2022
Accepted: 30-09-2022
Published: 09-10-2022

**ABSTRACT**

Another difference is in the appearance of Calmness Different object are present . And the cloud the purpose of this study was to examine the moderating variables is the purpose.

**Keywords:** Destruction material, Attribution

## முன்னுரை

வேற்றுமை என்ற சொல்லுக்கு வேறுபடுத்தி காட்டுவது என்பது பொருள். பெயர் சொல்லோடு வேற்றுமை உருபுகள் இணையும் போது அடையும் மாற்றத்தினை கூறுவது வேற்றுமை ஆகும். இவைகள் பெயரின் பின்னால் தனியாகவோ சாரியை பெற்றோ வரும்.

## வேற்றுமை உருபுகளின் வகைகள்

தம்மை ஏற்றுகொள்வதற்குரிய எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும் இறுதியாக வரும் தன்மை கொண்டது. வேற்றுமை உருபுகள் தன்னை ஏற்ற பெயர் பொருளை வேற்றுமை படுத்துவனவாக வரும் வேற்றுமைகள் எட்டு என நன்னூலார் கூறுகின்றார் (Ibrahim, 2018).

வேற்றுமை தானே ஏழ்என மொழிப”[1]

”விளிகொள் வதன் கண் விளியோடு எட்டே”[2]

என தொல்காப்பிம் கூறுகின்றது (Thirugnana Sambandam, 2013).

தொல்காப்பியரும் நன்னூலாரும் எட்டு வேற்றுமைகளையும் கீழ்வருமாறு வகைபடுத்துகின்றனர்.

”பெயரே ஐ ஆல் குஇன் அதுகண்

விளி என்றாகும் அவற்றின் பெயர்முறை"[3]

## பிறமேக நிதான எழுவாய் வேற்றுமை உருபுகள்

முதல் வேற்றுமை எழுவாயாக செயல்படுகிற காரணத்தினால் இதனை எழுவாய் வேற்றுமை என்றும் கூறுவார். இதற்கு என தனியாக உருபுகள் இல்லை.

"அவற்றுள்

எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே"[4]

(எ.கா) மரம், மனிதன், பறவை

என்ற சூத்தித்தில் தொல்காப்பியர் விளக்குகிறார் தொல்காப்பியர் கூறும் முதல் வேற்றுமைகள்

"பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்

வினை நிலை உரைத்தல் வினாவிற்கு ஏற்றல்

பண்புகொள வருதல் பெயர் கொள வருதல் என்று

அன்றி அனைத்தும் பெயர்பயனிலையே"[5]

என முதல் வேற்றுமை ஆறு என்கிறார். தொல்காப்பியர் நன்னூலார் கருத்து!

"ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே"[6]

என்ற சூத்திரத்தால் கூறுகின்றனர்.

"எழுவாய் உருபு திரிபில் பெயரே

வினை பெயர் வினாக் கொளல் அதன் பயனிலையே"[7]

## பொருண்மை சுட்டல்

ஒரு பொருளின் உண்மை தன்மையை குறித்து வரும் சொல் பொருண்மை சுட்டல்.

"கருதுபிணி நாலாயிரத்து நாற்பத்தெட்டில்

கோப்பாக கொடிய பிணி மேகமாகும்" [8]

## வியங்கொள வருதல்

ஏவலை குறித்து வரும் சொல் வியங்கொள வருதல்.

"பக்தியுடன் சிவன்தனை பணிந்து போற்றி

பதினெட்டு சித்தர் தன்மை மனசுள் போற்றி

முத்தி தரும் மும்முதலை பணிந்து போற்றி

மூல முதலாதார பொருளை போற்றி" [9]

## வினா கொள வருதல்

வினா சொல் பயனிலையாக வருதலாகும். ஆய்வு பகுதியில் வினாக்கொள வரவில்லை.

### பண்பு கொள வருதல்

பண்பினை குறிக்கும் சொல்

"எண்டுற உடல் கறுக்கும் விவேகம் நோவு

இதமாக மஞ்சள் நிற பழுப்புண்டாகும்" [10]

### பெயர் கொள வருதல்

பெயரை குறிக்கும் சொல்

"சேதமற பிறமேகம் கல்லடைப்பு

சிறந்த நீரளிவு அரையாப்பு மற்றும்

நீத முற கிரிசனங்கள் முதலாய் மற்றும்

நேரிட்டு பாதிக்கும் தேகத்துக்கே" [11]

### பிறமேக நிதான இரண்டாம் வேற்றுமை உருபுகள்

இரண்டாம் வேற்றுமை உருபு ஐ ஆகும். இதனை செயபடுபொருள் வேற்றுமை என்பர். செயபடு பொருளாவது வினை முதலின் தொழிற் பயனை அடைவது ஆகும். இது செயலும் செயபடு பொருள் உணர்த்தும் என்பர். தொல்காப்பியர் தோன்றிய பொருளை செயபடு பொருளாக வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமை வினையும் வினை குறிப்புமாகிய இவ்விரண்டின் அடிப்படை பொருளில் வரும் என தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

நன்னூலார்!

"இரண்டாவதன் உருபு ஐயே அதன் பொருள்

ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்

ஒத்தல் உடைமை ஆதி ஆகும்"[12]

என இரண்டாம் வேற்றுமையையும் அது வரும் பொருளையும் இச்சூத்திரத்தில் சுட்டியுள்ளார்.

### அழித்தல் பொருள்

ஒத்தல் பொருள், அழித்தல் பொருளில் வருவது, உடைமைப் பொருள், துறக்கப்படுபொருள், அடைதல் பொருள் ஆய்வு பகுதியில் இடம் பெறவில்லை.

பிறமேக நிதான மூன்றாம் வேற்றுமை உருபுகள்

அல், ஆல், ஒடு, ஒடு ஆகியவை மூன்றாம் வேற்றுமையை உணர்த்தும் உருபுகளாகும். மூன்றாம் வேற்றுமையை உருபு, கருவி, கருத்தா என்னும் இரு பொருளில் வரும். நன்னூலார் இதனுடன் உடனிகழ்ச்சி பொருளையும் குறிப்பிடுகிறார்.

"மூன்றாகுவதே

ஓடுஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

வினை முதல் கருவி அணை முதற்று அதுவே"[13]

தொல்காப்பியரும்

"மூன்றா வதன் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு

கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள்"[14]

என நன்னூலாரும் மூன்றாம் வேற்றுமை பற்றி உரைக்கிக்கிறார்.

## உடனிகழ்ச்சி பொருள்

ஆல்

பகர்ந்தாலும் அவர்களுக்கு பலித்திடாது (பா.எ - 42)

கொண்டாலும் சகிக்காது புழுக்கூடாகும் (பா.எ -74)

உடன்

துள்ளாமல் நோயினுடன், குணத்தைக் கண்டு (பா.எ -31)

ஒடு

தெளிவான மாம்பட்டை சாறினோடு (பா.எ -20)

வாறான ஆவரை வேர் பட்டையோடு (பா.எ -191)

ஓடு

சாரும் அண்டாவதமொடு பொருத்து நோகும் (பா.எ -141)

## பிறமேக நிதான நான்காம் வேற்றுமை உருபுகள்

நான்காம் வேற்றுமையின் உருபு ஆகும். நான்காம் வேற்றுமை உருபின் மாற்று வடிவங்களாக அக்கு, இக்கு, உக்கு என்பன ஆய்வு பகுதியில் காணப்படுகின்றன. கொடை பகை ஆகிய வேற்றுமைகளில் வருகின்றது (Pandirayen, 1897).

கொடை

கருது பிணி தீர்பவர்க்கு இந்நூலாகும் (பா.எ -5)

விளிம்புவதற்கு பெருநூறு ஆகுமப்பா (பா.எ -7)

பகை

பணியான துர்சனற் காதிற்நூல்

பகர்ந்தாலும் அவர்களுக்கு பலித்திடாது. (பா.எ -4)

## பிறமேக நிதான ஐந்தாம் வேற்றுமை உருபுகள்

இல் இன் என்பவை ஐந்தாம் வேற்றுமை உருபுகள் ஆகும். இக்கால தமிழிலிருந்து இல் நின்று போன்றவை மாற்றுருபுகளாக அமைகின்றன. வினை, நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது போன்ற பொருளில் அமையும்.

(எ.கா) கல்வியில்-நீங்கல் பொருள்

மரத்தின்- எல்லை பொருள்

அதனின்று- ஓப்புப் பொருள்

பிறமேக நிதான ஆறாம் வேற்றுமை உருபுகள்

ஒரு பொருளினை ஏற்று கொண்ட ஒருவன் ஆடினை தன்னுடையதாக உரிமை பாராட்டுவதுண்டு. இத்தகைய கிழமைப் பொருளை பெயர் பொருளிலிருந்து வேறுபடுத்துவது ஆறாம் வேற்றுமை உருபு ஆகும்.

ஆறாம் வேற்றுமை அது என்னும் உருபினை பெற்று வரும். இது தற்கிழமை, பிறிதின் கிழமை இரண்டு நிலைகளில் அமையும். அதன் மாற்றுருபுகளாக உடை, உடைய என்பவை அமைகின்றன.

(எ.கா) மரத்தினுடையது(6.8.2),

மனிதனது (24.5.1)

## பிறமேக நிதான ஏழாம் வேற்றுமை உருபுகள்

ஏழாம் வேற்றுமை இல் பொருள் உணர்த்தும் இதனை தொல்காப்பியர் வினை இடம், நிலம், காலம் இவற்றில் குறிப்பின் தோன்றும்.

மேலும் பொருள், இடம், காலம், சினை, குணம் தொழில் போன்ற அறுவகை பெயர்களும் தற்கிழமை, பிறிதின் கிழமை என்ற இரண்டனுக்கும் இடமாக நிற்கும் என இதன் பொருளை குறிப்பிடுகிறார்.

## பிறமேக நிதான ஏழாம் வேற்றுமை உருபுகள்

பொருள்

பிறிதின் கிழமை - காலத்தில் (22:3:1) பா.எ -22

காலம்

திறி நாள் (18:3) பா.எ -18

சினை

அபானந்தனிலே கழைப்பும் கூடும் (17:4:4) பா.எ -17

தொழில்

ஊனமறவே யரைத்து அந்தச் சாற்றில் (18:3:4) பா.எ -18

இடம் (சொல்லுருபு)

மனசுள் (1:1:7) பா.எ - 1

பிறமேக நிதான எட்டாம் வேற்றுமை உருபுகள்

விளி வேற்றுமையாகிய இவ்வேற்றுமையை உணர்த்தும் தனி உருபுகள் சொற்களின் இறுதியில் ஏற்படும் விகுதி மாற்றங்களே சொற்கள் எவ்வித மாற்றமும் இன்றி தொடரளவில் ஒலி அடுத்த நிலையில் இவ்வேற்றுமையை தனியே இனம் காண்பிக்கின்றன.

(எ.கா)

நாதா (6:1:7) பா.எ - 1

ஆகாரம் பெற்று மட்டுமே எட்டாம் வேற்றுமை வருகிறது.

## முடிவுரை

இவ்வாய்வு பகுதியில் பிறமேக நிதானம் சுவடியில் வேற்றுமை உருபுகள் பற்றி கூறப்பட்டுள்ள செய்திகள் மிகவும் விளக்கமாக கூறப்பட்டுள்ளது. இதில் எழுவாய் வேற்றுமை உருபில் பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல், வினா கொள வருதல், பண்பு கொள வருதல், பெயர் கொள வருதல் போன்றவை பிறமேக நிதான சுவடியில் கூறப்பட்டுள்ளது. இரண்டாம் வேற்றுமை உருபில் அழித்தல் பொருள் குறித்து பிறமேக திதான சுவடியில் கூறபட்டுள்ளது. மூன்றாம் வேற்றுமை உருவில் ஆல், உடன், ஒடு, ஓடு போன்றவை குறித்து கூறப்பட்டுள்ளது. நான்காம் வேற்றம் உருவில் கொடை, பகை குறித்து கூறப்பட்டுள்ளது. ஐந்தாம் வேற்றுமை உருபில் இல், இன் குறி போன்றவைகளை குறித்து கூறப்பட்டுள்ளது. ஆறாம் வேற்றுமை உருபில் உடை, உடைய என்பவை குறித்து கூறப்பட்டுள்ளது. ஏழாம் வேற்றுமை உருபில் பொருள், காலம், சினை, தொழில், இடம் போன்றவைகளை குறித்து பிறமேக நிதான சுவடியில் கூறப்பட்டுள்ளது. எட்டாம் வேற்றுமை உருபில் ஆகாரம் எண்ணும் சொல்லை குறித்து கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக எல்லா வேற்றுமை உருபுகளை குறித்து இவ்வாயில் தெளிவாக ஆராயப்பட்டுள்ளது.

## References

Ibrahim, P. (2018) Nannul Sollathigaram, New Century book house, Chennai, India

Pandirayen, (1897) Peramega Nithanam Olai chuvadi, Kanyakumari, India

Thirugnana Sambandam, S. (2013) Tholkappiyamum sollathigaramum, Kathir Publishing

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License